# கவிஞர் சக்தி ஜோதியின் இப்பொழுது வளர்ந்து விட்டாள் கவிதையில் தாய்மையின் வெளிப்பாடு

# "She has Grown up Now" by Poet Shakti Jyothi, the Expression of Motherhood

*ச. ஜானகிராமன்*
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு
தமிழ்நாடு, இந்தியா

*முனைவர் அ. இராமலிங்கம்*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா

**S. Janaki Raman**
*Erode Arts and Science College (Autonomous)*
*Erode, Tamil Nadu, India*

**Dr. A. Ramalingam**
*Associate Professor, Department of Tamil*
*Erode Arts and Science College (Autonomous)*
*Erode, Tamil Nadu, India*

**Citation**: Janaki Raman, S. and A. Ramalingam. "She has Grown up Now" by Poet Shakti Jyothi, the Expression of Motherhood." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 2, 2025, pp. 34-39.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.19762085*

*ஆய்வுச் சுருக்கம்*
*தமிழ் கவிதை வரலாற்றில் சங்கக் கவிதைகளுக்குப் பிறகு புதுக்கவிதைகளில் தான் உணர்வுகளை முன்னிறுத்தி சமூகத்தை வெளிக்காட்டும் முயற்சி அழுத்தமாக இடம்பெறுகிறது எனலாம். புதுக்கவிதைகள் இன்றைய மனித மனத்தைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி. இச்சமூகத்தில் ஒரு பெண்ணாக வாழ்வது என்பது அத்தனை கடினம் இல்லை. அம்மாவோடு இணைந்திருப்பதும் முரண்படுவதுமான கலவையான புதிய உலகத்தை மகள் தன்னுடைய வளரிளம் பருவத்தில் திறந்து வைக்கிறாள். மகளின் உலகத்தைச் சற்றேனும் அம்மாவால் புரிந்து கொள்ள இயலுமெனில், தான் கடந்து வந்த பதின்ம வயதுக்குள் தன்னையும் மலர்த்திக் கொள்ள இயலும். நான் கடந்து வந்த பாதையில் தான் என்னுடைய மகளும் நடக்கிறாள் என்ற போதிலும் என்னுடைய காலம் வேறு, அவளுடைய காலம் வேறு, நான் எதிர்கொண்ட எதிர்நிலை அனுபவங்கள் அவளுக்கும் நிகழக்கூடும். என்னைவிட எளிதாக அவள் அதனை கடந்து செல்ல வேண்டும் என்ற தாய்மையின் சிறப்பை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***கலைச்சொற்கள்:*** *தாய்மை, தாய்மை உணர்வு, பெண்மை, இயற்கை*

## Abstract
*In the history of Tamil poetry, it can be said that after Sangam poetry, it is in modern poetry that the attempt to express emotions and portray society is most strongly evident. Modern poetry is a mirror that reflects the contemporary human mind. Living as a woman in this society is not so difficult. The daughter, during her adolescence, opens up a new world, a mixture of connection and conflict with her mother. If the mother can understand her daughter's world even a little, she too can rediscover herself within the teenage years she herself has passed through. Although my daughter is walking the same path I have walked, my time was different from hers; the negative experiences I faced might also happen to her. The purpose of this article is*

*to highlight the essence of motherhood, which is the desire for the daughter to overcome these challenges more easily than the mother did.*

**முன்னுரை**

*"தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என்ற வரிகள் தாய்மையின் புகழ், பெருமை, சிறப்பு ஆகியவற்றை எடுத்துரைக்கும் சிறந்த கவித்துவமான வரிகளாகும். இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே கிடையாது. ஒரு பெண் மகள், சகோதரி, தாய், மனைவி, தோழி, வீட்டில் உள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டி, அனுபவங்களின் அரவணைப்பில் வழிநடத்திச் செல்லும் ஆசான். இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் அன்னை என்ற பாத்திரம் தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய் என்பது புனிதமானச் சொல். எந்த நாட்டில் பிறந்தாலும் என்ன மொழி பேசினாலும் பிறக்கும் குழந்தை உச்சரிக்கும் முதல் சொல் அம்மா என்று அழும் சொல் தான். இதனால் கூட முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி என்று கூறப்பட்டு இருக்கலாம். தாய்மை என்பது ஒரு பெண்ணின் வாழ்வின் உயரிய நிலையாகவும், அன்பின் உறைவிடமாகவும் கருதப்படுகிறது. ஒரு தாய் தனது குழந்தைக்கு உயிரூட்டுவதுடன், தனது நலன்களைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் தன்னலமற்ற அன்புடனும் அர்ப்பணிப்புடனும் குழந்தையை வளர்க்கிறாள். இது ஒரு சமூக பொறுப்பாகவும், எதிர்கால தலைமுறையை வளர்க்கும் முக்கியப் பணியாகவும் கருதப்படுகிறது. தாய்மை என்பது ஓர் உன்னத உணர்வாகும் இத்தகைய சிறப்பு வாய்ந்த தாய்மையின் வெளிப்பாட்டை விளக்குவதாக கட்டுரை அமைகின்றது.*

**தாய்மை விளக்கம்**

*பெண் வாழ்வில் மூன்று நிலைகளின் முறையே அரும்பி, வளர்ந்து, மலர்ந்து கனிந்த சோலையாக திகழ்கிறாள். அதாவது பெண்மை, தாய்மை, இறைமை என்பன இதிலடங்கும். இம்மூன்றினுள் "தாய்மை" எனும் நிலையை மிகச் சிறந்த நிலை எனலாம். பெண்மை, தாய்மை என்பவை பரிணாம வளர்ச்சிக்கு உருவாக்கப்பட்டதாகும். தாய்மை மலர்ந்தால் இறைமை கனியும், இறைமை கனிவுக்கு தாய்மை மிக இன்றியமையாத ஒன்றாகும். தாய்மை மலராவிடத்தில் இறைமை கனியாது. தாய்மை மலராக பெண்மையும் சிறப்புடையதாகாது என்று தாய்மைக்கு விளக்கம் கூறுகின்றனர்.*

**தாய்மையின் சிறப்புக்கள்**

*உலகில் இறைவனின் படைப்புகளான இவ்வானம், பூமி, மரம், செடி, கொடி, மிருகங்கள், மனிதர்கள் என்பனவாகும். இவைகள் அனைவரின் வாழ்விலும் தாய் என்ற ஒரு அற்புதமான ஒரு உயிரைப் படைத்துவிட்டான் இறைவன். தாயை புகழ்வதற்கு வார்த்தைகளே இல்லை எனலாம். தாயின் கடனைத் திருப்பிக் கொடுக்கவும் முடியாது. இதனை,*

> ***"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்***
> ***மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவன் ஆவதும்***
> ***தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே"***[1]

*என்ற பாடலின் வரிகளுக்கேற்ப அந்த வகையில் தாய் ஒரு குழந்தையின் வாழ்வை நெறிப்படுத்துவதற்கு தனது பங்களிப்பை அதிக அளவில் செய்கின்றாள். எந்தக் குழந்தையும் முதலில் காணும் உருவமும், உறவும் தாயாகும். தந்தையைக் கூட தாய் சொல்லி தான் அறிய முடிகிறது அத்தகைய சிறப்பு கூறியவர் தாய் என்பதை உணர முடிகிறது.*

**தாய்மை உணர்வு**

*குழந்தைக்கு பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கற்றுத் தருவது தாய். அதாவது தனது குழந்தையின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதிலும், சீர்மை செய்வதிலும் புனிதமான உறவு தாய்மையின் உறவாகும்.*

*சமுதாயத்தினாலும் பல சூழ்நிலையாலும் குழந்தைகள் தீய வழிகளில் ஈடுபடும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. அதை அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். அத்தகையவர்களைத் தன் அன்பின் அரவணைப்பின் மூலமே நல்வழிப்படுத்துபவள் தாய். மழைமுகம் காணாதப் பயிரும் தாய்முகம் காணாதப் பிள்ளையும் முன்னேறியதாக சரித்திரம் இல்லை என்பது போல ஒரு பயிரை விளைவித்தால் மட்டும் போதாது. அந்தப் பயிர் செழிப்பாக வளர்ந்து நல்ல விளைச்சலையும் தர வேண்டும். அதற்கு நீர்மை மிகவும் முதன்மையாகும். ஆதலால் தான் மழைக்காலத்தில் நாற்று நடுவது வழக்கமாகும். அதைப்போல ஒரு குழந்தை பிறந்தது முதல் நல்லப் பிள்ளையாக வளர்வதற்கு தாயின் நல்வழி காட்டல்களும், அன்பும் கட்டாயம் அவசியமாகிறது. அப்போதுதான் அக்குழந்தை அன்பு, பாசம், ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம் போன்ற நல்ல குணங்களைப் பின்பற்றி வளரும்.*

**சங்க இலக்கியங்களில் தாய்மையின் வெளிப்பாடு**

*சமுதாயத்தில் கட்டமைக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் சமுதாய மக்களும் வாழ்கின்றனர். நல்ல பண்பு கொண்ட மனிதனின் இலக்கியங்கள் போற்றப்படுகின்றது. தீய எண்ணங்கள் கொண்ட மக்களின் குணத்தைச் சுட்டிக்காட்டி இவ்வாறு இருக்கக் கூடாது என்றும் உணர்த்துகிறது. இம்மாந்தர்களை நல்வழிப்படுத்துகின்ற தாய் உயர்ந்து நிற்கின்றாள். தாய் எப்படி தன் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று நினைக்கின்றாளோ அதன்படியே வளர்த்து வருவாள்.*

*சமுதாயத்தில் ஆடவர்களை நல்வழிப்படுத்துபவர்கள் பெண்கள் எனலாம். இந்நிலையே தமிழ் இலக்கியத்திலும் காணப்படுகின்றன. அதனால் தான் பெண்கள் இலக்கியத்தில் முதன்மைப் பாத்திரங்களாக அதிகமாக படைக்கப்பட்டுள்ளனர்.*

*சங்க இலக்கியங்களில் பெண்கள் நற்றாயாகவும், செவிலியாகவும், நல்ல மனைவியாகவும், நாட்டைக் காக்கும் நல்ல அரிசியாகவும் இருந்துள்ளனர். இவர்கள் பகை என்று வரும்போது பேராண்மை உடையவராகவும் வாழ்ந்திருக்கின்றனர். இத்தகைய காரணங்களால் ஒரு பெண் தாயான நிலையில் தன்னலம் அளித்து மக்கள் நலம் பேணுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். பெண்மையின் முழுமை என்பது தாய்மையில் தான் உள்ளது. அத்தகைய தன்மையையும், சிறப்புகளையும் இலக்கியங்களில் காண முடிகின்றது.*

**தாய்மை - வரையறை**

*தாய் என்னும் சொல் பெண்ணுக்குரிய முதன்மைச் சொல்லாகும். இருப்பினும் தாய்மைப் பண்பு கொண்ட ஆண்களையும் தாய் என்று கூறும் தன்மையினைத் தொல்காப்பியம் முதற்கொண்டு இன்று வரை உள்ள இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. இதனை, ''ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும் தாயாகிறாள் ஆதலினால் தாய் தருதல், குழந்தையைத் தருதல் என்ற பொருள் கொண்டு யகர விகுதி பெற்றுத் தாய் என்ற சொல் வந்திருக்கலாம்''[2] தமிழில் தாயைக் குறிக்கும் சொற்கள் பல உண்டு. அன்னை, அம்மனை, ஆய், அம்மை, ஆயி, யாய், தவ்வை, அம்மா என்பனவாகும். இவற்றில் அம்மா என்ற சொல் மிக மிக பழங்காலத்திலேயே எழுந்தது என்பதாகும். இதனை, ''இச்சொல்லால் உறவில்லாத பெண்களையும் பெயர்*

*தெரியாத பெண்களையும் சுட்டி அழைப்பது இயல்பான ஒன்றாகக் கருதக்காரணம் பெண்ணானவள் மக்கட்பேற்றுக்கு அடிப்படையாக அமைந்தவள்"[3] என்று கூறுவதன் மூலம் தாய்மையின் பெயர் போற்றப்படுகிறது. மேலும் அம்மா என்ற சொல்லின் பொருள் "அம்மம் என்றால் உணவு என்று பொருள் குழந்தைக்கு அந்த உணவினை ஊட்டி வளர்ப்பவள் தாய், ஆகவே அவள் அம்மா என அழைக்கப்பட்டிருக்கிறாள்"[4] என்ற கருத்து பொருத்தமுடையதாகும்.*

*அம்மா எனும் சொல் அர்த்தம் சொல்லும் வார்த்தையாகும். தமிழருவி மணியன் அவர்கள் தமிழுக்கு தலை வணக்கம் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றும் பொழுது "அம்மா" என்பதில் உள்ளிருக்கும் உங்களுக்கு உயிர் கொடுத்தவள் தாய் என்பதால் முதல் எழுத்து "அ" எனும் உயிர் எழுத்தையும், உயிர் வளர மெய் தேவை என்பதால் "ம்" எனும் மெய்யெழுத்தை இரண்டாவதாகவும் பத்து மாதம் கழித்து உயிர், மெய் இரண்டையும் சேர்த்து உருவமாக வெளிக்கொணர்வதால் "மா" எனும் உயிர்மெய் எழுத்து வந்துள்ளது. இதிலும் தாய்மை மென்மையானவள் என்பதால் அம்மா என்ற சொல்லில் "ம்" எனும் மெல்லின எழுத்து வந்துள்ளது என்று கூறினார்.*

**இக்கால இலக்கியங்களில் தாய்மை வெளிப்பாடு**

*இக்கால இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுவது தாய்மை என்னும் உணர்வு நிலையாகும். உலகில் தாய்க்கு நிகராக வேறு எதனையும் நாம் கூற முடியாது. பல்வேறு நிலைக்களன்களை வைத்து தமிழ் கவிஞர்கள் தாய்மையைக் கவிதையாகப் போற்றிப் பாடுகின்றனர். குறிப்பாக தாயைப் பற்றிய அன்பின் வெளிப்பாடுகளை கவிதை வரிகளாகப் படைக்கப்பட்டுள்ளது. "உள்ளத்தில் உள்ளது கவிதை இன்ப உருவெடுப்பது கவிதை" என்ற வரிகளுக்கு ஏற்றாற் போல, தாய்மையை உள்ளத்தில் வைத்து தனது இன்ப எழுச்சியை கவிதையாகப் படைப்பது இதன் சிறப்பாகும். "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்ற புறநானூறு பாடலில் மகனைப் பெற்று பாதுகாப்பாக வளர்த்தல் என்னுடைய கடமை என்று ஒரு வீரத்தாய் பாடுவதை நினைவூட்டுகிறது. தாயின் சொற்கேட்டு வளர்கிறான். தன் மக்களுக்காக போராட்டத்தில் களம் இறங்குகின்றான். இதனை கலைஞர்,*

***"அவர்களின் பாவெழும் ஒருவன்***
***என்கின்ற போது - இந்த அன்னை மனம்***
***ஈன்ற பொழுதினும் பெரிதுக்கின்ற - ஆனால்***
***அவள் சூறாவளியை சூழ்ந்தெரிக்க***
***போகிறான் என நினைக்கும் போது***
***சுமந்து பெற்றவளின் இதயம் அல்லவோ***
***சுக்கு நூறாகிறது"[5]***

*என்று எழுதுகிறார். ஒரு தாயின் வளர்ப்பையும் தன் குழந்தைக் கொண்டுள்ள அளவற்ற அன்பையும் இக்கவிதை வெளிப்படுத்தியுள்ளது.*

**தாய் - சேய் உறவின் மேன்மை**

*தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவை மென்மையாய் புலப்படுத்தும் நோக்கில் கவிஞர் இதனை,*

***"பட்டாம் பூச்சியாய் பூக்கும் உன் துடிப்பில்***
***எத்தனை யுகங்கள் உயர்ந்திருந்தேன்***
***உனக்கும் நிலவுக்கும் உருட்டி வைத்துள்ள***

***சோற்று உருண்டைகளை***
***என்ன செய்யட்டும்"*** [6]

*என்று தனது குழந்தையை இழந்து தவிக்கும் ஒரு தாயின் இழப்பின் வலியை கவிதையாகச் சித்தரிக்கின்றார். மேலும் தாயினை இழந்து தவிக்கும் ஒரு குழந்தையின் புலம்பலை ஒரு இக்கால கவிஞர்,*

***"அம்மா வீட்டுக்கு வருவதாய்***
***பக்கத்து வீட்டு பாட்டி சொன்னாள்***
***அம்மாவுக்கு பிடித்த***
***கறியும் சோறுமாய் காத்திருக்கிறேன்***
***ஒட்டுத் திண்ணையில்***
***இன்று முழு அமாவாசை"*** [7]

*என்று அம்மாவின் பிரிவுத்துயரை தாங்காமல் பக்கத்து வீட்டுப்பாட்டி சொல்லும் முடநம்பிக்கையில் தன்னுடைய அம்மாவின் வருகையை எதிர்நோக்கி இருக்கும் குழந்தையும் தாய்மை மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.*

*கவிஞர் இளசை சுந்தரம் அவர்கள் விடியலின் வெளிச்சம் என்னும் கவிதை தொகுப்பில் ஒரு தாயின் புலம்பல் என்ற கவிதையில் அனாதை இல்லத்தில் இருக்கும் தாயின் மனநிலையை அப்படியே வெளிப்படுத்தும் நோக்கில்*

***கோயிலுக்குப் போகத்தானே***
***கூட்டிக்கொண்டு போனாய்!***
***கூட்டத்தின் நெரிசலில் ஏன் என்னை***
***தொலைத்து விட்டுப் போனாய்!***
***கர்பகிரகத்தில் நின்று***
***கடவுளைக் கும்பிட்ட நீ***
***கர்ப்பத்தில் உனைச் சுமந்த***
***எனை எப்படி மறந்தாய்?*** [8]

*என்று இக்கவிதை அமைந்துள்ளது. அதாவது தாயின் புலம்பல் வழியாக மிக அழகாக கவிஞர் தாய்மை உணர்வை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.*

**முடிவுரை**

*தாய்மையின் விளக்கம், தாய்மை உணர்வு முதலியவற்றை எடுத்துக் கூறி தாய்முகம் காணாதப் பிள்ளை முன்னேறிய சரித்திரம் இல்லை என தாய்மையின் போற்றுதலை மிகத் தெளிவாக எடுத்தியம்புவதை காண முடிகிறது. உலகின் முதல் இலக்கியம் தாய்மையிலிருந்து தான் உருவானது என்பதையும் அவ்விலக்கியமே நாட்டுப்புற இலக்கியங்களில் தாலாட்டு என்னும் எழுதா இலக்கியம் என்பதையும் பல்வேறு இன்னல்களைத் தாண்டி தாய் தன் பிள்ளைகளை வளர்ப்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.*

**அடிக்குறிப்புக்கள்**

1. *புலமைப்பித்தன் பாடல்கள், நீதிக்குத் தலைவணங்கு படம், 1976*
2. *வள்ளியம்மை. மு, தமிழ் இலக்கியத்தில் தாய், ப. 12*
3. *தொல் .பொருள். அகம் .நூ.36*
4. *வள்ளியம்மை. மு, தமிழ் இலக்கியத்தில் தாய் ப.2*

5. கலைஞர். கருணாநிதி கவிதை நடையில் கார்க்கியின் தாய், ப.47
6. இராஜலெட்சுமி, ஆக்கமும் பெண்ணாலே, ப.131
7. செல்வகுமாரன்.சு, கூந்தல் வண்டி, ப.46
8. இளசை சுந்தரம், விடியலின் வெளிச்சம், ப.4
9. ஜெயராமன்.நா, ஈன்ற தாய், ப.1
10. சக்தி ஜோதி, இப்பொழுது வளர்ந்துவிட்டாள், ப.11.